**INDIAN JOURNAL OF TAMIL** | Volume 2 | Issue 1

இந்திய தமிழ் ஆய்விதழ்

Check for updates

RESEARCH ARTICLE

# தமிழ் உரை அறிவாளர் பரிமேலழகர் ஓர் ஆய்வு

**மு. கயல்விழி** [அ,*]

[அ] தமிழ்த் துறை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்-631502. தமிழ்நாடு, இந்தியா.

# Tamil scholastic commentator Parimelazhagar – A Study

**M. Kayalvizhy** [a, *]

[a] Department of Tamil, Pachayappas College for Women, Kancheepuram- 631502, Tamil Nadu, India

*Corresponding Author Email: kayalarul22@gmail.com

(Received: 28th December 2020; Accepted: 11th Febuary 2021)

DOI: http://doi.org/10.34256/ijot2112

**Abstract:** Tamil literature was an ancient one among the world literature. Number of scholars dedicated their contributions to that. Among them were the commentators and they have a pioneer place in it. Parimelazhagar was the most famous critic who enhance the literature. The world famous Thirukkural was well understood with the help of his commentary. He used his broad mind and various techniques in it. He is considered the one among the literation who nourished Tamil literature.

**Key Words:** Tamil Literature, Commentator, Tamil Scholar, Technique, Parimelazhagar

## முன்னுரை

தமிழ் இலக்கிய உலகம் மிகவும் பழமை வாய்ந்தது. அதில் பல்வகைக் கூறுகள் சிறப்பு வாய்ந்தவையாகும். கவிதை, கதை, கட்டுரை போன்ற இயல்கள் தமிழ் மொழியை வளப்படுத்தினாலும் பிற எல்லா இயல்களையும் விடக் கவிதையே சிறப்பிடம் பெற்றது. காரணம் அது படிப்போர் மனதை இன்புறுத்தும் இயல்புடையது. அந்த வகையில் தமிழில் ஏராளமான கவி நூல்கள் தோன்றினாலும் எல்லாம் காலத்தை வென்று நிலைக்கவில்லை. பல்வகைக் காரணங்களால் பல நூல்கள் கால வெள்ளத்தில் அழிந்தன. தமிழில் அழிந்த நூல்கள் போக எஞ்சிய நூல்களில் திருக்குறளே தலைசிறந்த நூலாகக் கொண்டாடப்படுகின்றது. அந்நூலில் உள்ள சிறப்பான கருத்துகள் படிப்போரை எளிதில் சென்றடையச் செய்த பெருமை அதன் உரையாசிரியர்களையே சாறும்.

திருக்குறளுக்கு பத்து உரையாசிரியர்கள் உரை செய்திருந்தாலும் பரிமேலழகர் உரையே தலைசிறந்த உரையாக அறிஞர் பெருமக்களால் கொண்டாடப் படுகின்றது. கவி புனையும் கவிகளுக்குப் பன்முக அறிவும் பல மொழிப் பயிற்சியும் பன்நூல் பரிச்சயம் வேண்டுவதில்லை. ஆனால் உரையாசிரியர்களுக்கு இத்திறன்கள் யாவும் மிகவும் வேண்டுவனவாகும். அத்திறன்களே அவர்தம் உரையைச் சிறக்கச் செய்யும். அத்தகு சிறப்பியல்கள் யாவும் கொண்டவராகத் திருக்குறள் உரையாளர் பரிமேலழகர் திகழ்கின்றார். திருக்குறள் பாரெல்லாம் புகழ்பெற்றுத் திகழ்வதற்குப்

பரிமேலழகரின் சிறப்பான உரையும் ஒரு காரணமாகும். இவ்வாறு பல் திறன் வாய்ந்த பரிமேலழகரைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வாழ்விடம்

பரிமேலழகர் பரிமேலழகியார், பரிமேலழகியன் பரிமேலழகரையன் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டார். இவர் காஞ்சிபுரத்தைச் சார்ந்தவர் என்றும் மதுரையைச் சார்ந்தவர் என்றும் இருவேறு கருத்துகள் உள.

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள

நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ-நூலிற்

பரித்த உரையெல்லாம் பரிமேல் லழகன்

தெரித்த வுரையாமோ தெளி" (தொண்டைமண்டலச் சதகம்-41)

என்று கூறப்படுவதால் இவர் தொண்டைமண்டலத்தைச் சார்ந்தவர் என்பது உறுதி (Padikkasu Pulaver, 1887). இவர் காஞ்சிபுரத்தைச் சார்ந்தவர் என்பதற்குச் சில சான்றுகள் உள,

"திருக்காஞ்சி வாழ்பரி மேலழகன்" (உரைப்பாயிரம்)

என்றும்,

"வள்ளுவர் நூற்கு வழிகாட்டி னான்தொண்டை மண்டலமே"

என்று குறிப்பிடும் பாக்கள் இவர் காஞ்சிபுரத்தைச் சார்ந்தவர் என்பதை உறுதி செய்யும். இவர் காஞ்சிபுரம் ஸ்ரீ உலகளந்த பெருமாள் கோயில் அர்ச்சகர் மரபில் வந்தவர் என்றுமுறைப்பர். சில ஆய்வாளர்கள் இதற்கு மாறுபட்டு இவர் மதுரையைச் சார்ந்தவர் என்பர். இதற்குச் சான்றாக

"பரிமே லழகியகோப் போற்றுதமிழ்க் கூடல்

பரிமே லழகியனென் பான்" (பெருந்தொகை:1548)

என்ற பாடலைக் கொண்டு இவ்வாறு முடிவு செய்வர் (Raghava Iyengar, Mu., 1935). மேலும்

"கலைத்தேர் ஒக்கைக் காவலன்" (பெருந்தொகை:1547)

என்ற பாடலைக் கொண்டு இவர் மதுரையைச் சார்ந்த ஒக்கூர் பகுதியின் காவலர் என்றுரைப்பர். இவர் மதுரையம் பதியினர் என்பதை

"முன்னுரைத்த தேவர்குறள் மூதறிஞர் போற்றும் பொருள்

இன்னத்து என்றுரைக்க எய்தினான்- முன்னூற்

புரிமேல் அழகியகோப் போற்று தமிழ்க் கூடல்

பரிமே லழகியனென் பான்"

என்ற பாடல் உணர்தும். மேலும் இவர் தம் பேச்சு வழக்கு நெல்லை மாவட்டப் பேச்சு வழக்காய் உள்ளது,

"செவ்வி பெற மலர்ந்து வைத்தும் நாற்றம் இல்லாத பூச்

சூடப்படாதவாறு போல நன்கு மதிக்கப்பட்டார்"

என்று குறள் எண் 650 க்கு இவர் விளக்கம் அளிக்கின்றார். மலர்ந்து, கற்று என்ற

சொற்களுடன் வைத்து என்ற சொல்லைச் சேர்த்து வழங்குகின்றார். இவ்வாறு வழங்குதல் பாண்டிய நாட்டு மக்களுக்கு மட்டுமே உள்ள வழக்கு என்பதால் இவர் பாண்டிய நாட்டவர் என்பதை அறிய முடிகின்றது. எனவே இவர் காஞ்சியில் பிறந்து பிற்காலத்தில் பாண்டிய நாடு சென்று வாழ்ந்தார் என்று அறிய முடிகின்றது.

## காலம்

இவர் இடைக்காலத்தவர் என்பது உறுதி. இவர் எக்காலத்தவர் என்பதற்கு இவரது நூலுள் பல குறிப்புகள் உள. காமத்துப் பாலுக்கு இவர் எழுதிய தோற்றுவாய் உரையில்,

"வடநூலுள் போஜராஜனும் சுவைப்பல என்று கூறுவார் கூறுக. யாம்

கூறியது இன்பச் சுவை ஒன்றனையுமே என இதனையே மிகுத்துக் கூறினார்"

என்று போஜராஜனைப் பற்றி கூறியுள்ளமையால் இவர் போஜராஜனுடைய காலமான கி.பி. 11 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவராவார் என்று தெரிகின்றது. மேலும் கி.பி. 1271 ஆம் ஆண்டு தெலுங்கு சோட மன்னன் கண்ட கோபாலனுடைய கல்வெட்டு,

"ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து நகரம் காஞ்சிபுரத்துத் திருவந்தியூர் நின்றருளிய அருளாளப் பெருமாளுக்குப் புவியாளப் பிறந்த ஆமூர் நீலகங்கன் என்றும் அரையன் பரிமேலழகனிடம் 500 குழி திருநந்தவனப் பகுதியினை 30 மாடைக்கு விலையாகப் பெற்றுத் திருமாலைப்புரமாக பெருமாள் கோயிலுக்கு வழங்கினான்"

என்ற கூறுகின்றது. இவற்றால் பரிமேலழகர் கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்பதை அறிய முடிகின்றது. இது தவிர உமாபதி சிவாச்சாரியார் தம் "சங்கற்ப நிராகரணம்" என்ற நூலில் பரிமேலழகர் செய்த உரையைப் பாராட்டுகின்றார். இந்நூல் கி.பி. 1313 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. எனவே பரிமேலழகர் இவர் காலத்திற்கும் முற்பட்டவர் என்று தெரிகின்றது. மேலும் பரிமேலழகர் நன்னூல் படைத்த ஒருபொருட் பன்மொழியைத் தன் நூலில் இரண்டு இடங்களில் பயன்படுத்துகின்றார் (குறள்:571, 863). எனவே நன்னூலார் காலத்திற்கு இவர் பிற்பட்டவர் என்பதும் சேனாவரையர் கருத்தைத் தழுவி உரை செய்வதால் (குறள்:542) இவர் அவர் காலத்துக்குப் பிற்பட்டவர் என்றும் தெரிகின்றது. திருக்குறளுக்கு உரை செய்த பிற உரையாசிரியர்கள் கருத்துகளையும் இவர் எடுத்தாண்டதால் அவர்கள் அனைவரின் காலத்திற்கும் இவர் பிற்பட்டவர் என்று தெரிகின்றது (Parimelalhagar, 2000).

## சமயம்

பரிமேலழகர் வைணவச் சமயத்தவராவார். இதற்கான சான்றுகள் இவருரையில் உள்ளன. இவர் திருக்குறள் இறை மாட்சி உரையில்,

"திருவுடை மன்னரைக் கானின்

திருமாலைக் கண்டேனே என்னும்"

என்ற திருவாய்மொழிப் பாடலை உதாரணம் காட்டுகின்றார். திருக்குறளின் 349 வது குறளுக்கு உரைவகுக்கும் போது

"அற்றது பற்றேனில் உற்றது வீடு"

என்று மீண்டும் திருவாய்மொழியை உதாரணம் காட்டுகின்றார். இது தவிர 370 வது குறளுக்கு

“நன்றாய் ஞானங் கடந்து”

என்ற திருவாய் மொழிப் பாடலை மீண்டும் உதாரணம் காட்டுகின்றார் (Parimelalhagar, 2000). இது தவிர 1103 குறட்பாவில் வரும்

“தாமரை கண்ணான் உலகு”

என்ற வரிகளுக்கு,

“தவயோகிகள் எய்தும் செங்கண்மால் உலகு என்பர். இதை இந்திரன் உலகு என்பாரும் உளர். தாமரை கண்ணான் என்பது அவனுக்குப் பெயரன்மையின் அஃது உரையன்மை யரிக”

என்று உரைத்துத் தன் வைணவப் பற்றை வெளிப்படுத்துகின்றார். மடியிலா மன்னவன் (குறள்:610) என்ற குறளில் வரும் “அடியளந்தான்” என்பதற்கு

“தான் அடியளவானே எல்லா உலகையும் அளந்த இறைவன்”

என்று திருமாலைக் குறிப்பிட்டுத் தான் வைணவரென்று காட்டுகின்றார்.

“நீணிலங் கடந்தோன் றாடொழு மரபிற்

பரிமே லழக னுரிமையி னுணர்ந்தே” (பரிபாடல்-உரைச்சிறப்புப்பாயிரம்:20-21)

என்ற பாடல் அடிகள் இவர் வைணவர் என்பதை உணர்த்தும். “பரிமேலழகர் நாதன்” என்பது வைணவ அடியார்கள் பெயர் என்பதால் இவர் வைணவப் பெரியர் என்பதும் உறுதியாகின்றது. ஆனால் இவரது உரையை நோக்குகையில் இவர் சமயப்பொது நோக்கினர் என்று தெரிகின்றது (Parimanam, A.M., & Balasubramaniyam, K.V., 2007).

## உரையியல்பு

“வள்ளுவச் சீர் அன்பர்மொழி வாசகன்தொல் காப்பியமே

தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை- ஒள்ளிய சீர்த்

தொண்டர் புராணந் தொகுசித்தி யோராறும்

தண்டமிழின் மேலாந் தரம்”

என்று உமாபதி சிவாச்சாரியார் பரிமேலழகரின் உரைசிறப்பை புகழ்ந்துரைப்பார். இவர் திருக்குறளுக்கும் திருமுருகாற்றுப்படைக்கும் பரிபாடலுக்கும் உரையெழுதினார் என்பர். ஆனால் திருமுருகாற்றுப் படைக்கு இவர் உரை எழுதியதை அறிஞர்கள் மறுக்கின்றனர். இவரது திருக்குறள் உரையினின்று இந்நூலின் உரை மாறுபடுவதால் அவ்வாறு காரணம் கூறி மறுப்பர். இவர் உரை செய்கையில் சில தனி இயல்புகளைப் பின்பற்றுகின்றார். இவர் ஏனைய உரைகளை நினைவில் கொண்டே உரையெழுதும் இயல்பினர். பிறரின் வேறுபாடுகளை நன்கு குறிக்கின்றார், பொருத்தமற்ற பாடங்களை விளக்குகின்றார், தவறான உரையைக் காரணம் கூறித் தனக்கு உடன்பாடு இல்லாத கருத்துகளைச் சுட்டி செல்கின்றார், மாறுபட்ட கொள்கைகளை மதிக்கின்றார். இவர் எழுதியது பொழிப்புரையேயாகும். ஆனால் பதிபித்தவர்கள் இதைப் பதவுரையாக்கினர். இவரது அதிகார அடைவு ஒவ்வொரு அதிகாரத்திலும் வரும் குறட்பாக்களைப் பொருளமைதி நோக்கில் தனியாகவோ தொகுத்தோ பொருளைக் கூறுகின்றது.

தேவையான இடத்தில் வடநூலார் கூறும் கருத்துகளைத் தமிழில் விளங்குமாறு கூறுகின்றார். தேவையானவிடத்தில் பதாச்சாரங்களை கூறிச்செல்கின்றார். இவரது உரை சொற்சுவையும் பொருட்சுவையும் ஒருங்கே கொண்டு திகழ்கின்றது. சிலவிடங்களில் செய்யுளில்

காணப்படுவது போன்று எதுகை, மோனை போன்று ஓசை நயத்துடன் அமைந்துள்ளது. இது தவிரப் பிற உரை ஆசிரியர்களின் பாடப் பகுதிகளை உரைநடையாகக் கொண்டு செல்வதும் குறட்பாக்களையும் குறட்பாவின் பகுதிகளையும் உரையினில் எடுத்தாள்வதும் அறிய உவமைகளை உரை நடுவே அளித்துச் செல்வதும் இவரது உரையின் தனிச் சிறப்பாகும். பொதுவாக இவரது உரை சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்து காணப்படுகின்றது. இவரது உரைநடை காளிங்கர் உரையின் சிறப்பியல்பான தனித்தமிழ் நடையைப் பெரிதும் பின்பற்றியே அமைந்துள்ளது.

## சொல் விளக்கம்

பரிமேலழகர் தம் உரையில் சொல் விளக்கத்தைப் படிப்போர் மனதில் ஆழப்பதியும் வண்ணம் அளித்துள்ளார்கள். இவரது சொல்விளக்கம் அருமையானது, ஆழமானது, திட்ப நுட்பங்கள் நிறைந்தது. திருக்குறளில் வள்ளுவர் கையாண்ட சொற்களின் அருமையை நன்கு விளங்கத் தம் உரையில் கூறிச் செல்கின்றார். சிலவிடங்களில் தமது உரையில் கையாளும் சொல்லுக்கும் அவ்வாறே சிறப்புடன் விளக்கம் அளிக்கின்றார். சான்றாகக் குறைதல் (குறள்:17), வாழ்நாள் (குறள்:38), வியாது (குறள்:207), அருங்கேடன் (குறள்:210), தள்ளுதல் (குறள்:290), கைத்து (குறள்:593), மரம் (குறள்:600), குறை (குறள்:612), இடன் (குறள்: 910), கை (குறள்:925), மறைத்தல் (குறள்:129) போன்றவற்றிற்கு இவர் தரும் குறிப்பு விளக்கங்களைச் சான்றாகக் கொள்ளலாம் (Parimelalhagar, 2000).

சொற்களுக்கு விளக்கமளிப்பதில் இவர் வல்லவராகத் திகழ்ந்தார். அது அனைவரும் புரிந்து கொள்ளும்வண்ணம் அமைந்திருத்தல் சிறப்பு. சில சொற்களுக்கு இவர் தரும் விளக்கங்கள் மிகவும் பாராட்டுக்குரியது. கண்ணுக்குத் தெரியாத பண்பு நலன்களுக்கு விளக்கம் அளித்தலென்பது உளவியல் அறிவும் மொழியில் அறிவும் நன்கு வாய்த்தோருக்கே அமையும். இவர் அவ்விரு இயல்புகளும் ஒருங்கே கொண்டவராகத் திகழ்ந்தார். இதை இவர் பண்புப் பெயர்களுக்குத் தரும் விளக்கங்களால் நன்கறியலாம். தானம், தவம் (குறள்:19), குறி எதிர்ப்பு (குறள்:221), ஒளி (698, 971), அணங்கு (குறள்:918) மானம் (97 ஆம் அதிகாரத் தோற்றுவாய்) என்பனவற்றிற்கு இவர் தரும் விளக்கங்கள் மூலம் அறியலாம். சான்றாக மானம் என்பதற்கு இவர் தரும் விளக்கங்களாவது:

"மானம்: அஃதாவது எஞ்ஞான்றும் தந்நிலையில் தாழாமையும்

தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையு மாம்"

என்று அழகுடன் உரைப்பதைக் காணலாம். மேலும் இவ்வரிகள் இயைபுத் தொடையுடன் அமைந்திருப்பதை நன்கறியலாம்.

## உரை மேற்கோள்

பரிமேலழகர் தொல்காப்பியத்தில் நன்கு ஊறித் திளைத்தவர் என்று அறியலாகின்றது. இது தவிரத் தமிழிலக்கியம் முழுவதும் ஆழக்கற்றவர் என்பதை இவரது உரையின் மூலம் அறியலாம். திருக்குறளில் உள்ள 3, 402, 899, 960, 1043 போன்ற குறட் பாக்களுக்கு இவர் அளிக்கும் உரை மேற்கோள்களிலிருந்து இதை அறியலாம். தம் உரையில் இலக்கணக் குறிப்புகளுக்குத் தொல்காப்பியத்தையே கருவி நூலாகக் கொண்டு செல்கின்றார். அணிகள் பற்றி விளக்கும் போது பிற்கால இலக்கண நூல்களைக் கையாள்கின்றார். இலக்கிய மேற்கோள்களுக்குச் சங்க இலக்கியங்களைச் சுட்டிச்செல்வார். புறப்பொருள் பற்றி கூறும் போது புறப்பொருள் வெண்பா மாலை நூலைக் கொள்வார். இவற்றால் தமிழிலக்கியம் முழுவதும் இவர் நன்கு கற்றவர் என்பது தெரிகின்றது. சான்றாக 392 ஆம் குறட்பாவிற்கு உரையெழுதும் போது

"எண் என்பது கணிதம். அது கருவியும் செய்கையும் என

இருவகைப்படும். அவை ஏரம்பம் முதலிய நூல்களுட் காண்க"

என்று உரைப்பதால் மறைந்து போன கணித நூலான ஏரம்பம் போன்ற நூல்களிலும் இவர் நன்கு பயிற்சி உடையோராய்த் திகழ்ந்தார் என்பது பெறப்படுகின்றது.

## வடமொழி அறிவு

இவர் தமிழைப் போன்றே வடமொழியில் ஆழ்ந்த புலமை மிக்கவர். இதை இவரது உரையின் பலவிடங்களில் நன்கு அறியலாம். இதைக் கீழ்க்கண்ட வாசகம் உணர்த்தும்:

"வடநூற்றையும் தென்திசைத் தமிழும்

விதிமுறை பயின்ற நெறியறி புலவன்"

இவர் பஞ்சக் கிலேசம் (குறள்:38), தாற்பரியம் (குறள்:139), பரகீயம் (குறள்:141), உத்தி (குறள்:242), தத்துவ ஞானம் (36 ஆம் அதிகாரத் தோற்றுவாய்), அங்கம் (குறள்:381), பகை வர்க்கம் (44ஆம் அதிகாரத் தோற்றுவாய்), ஆத்தாயிகள் (குறள்:550), மந்திரத்திற்கு அங்கம் (குறள்:631), மௌலம் (குறள்:762) போன்ற வடமொழி இலக்கணக் கூறுகளைத் தம் உரையில் ஒப்புமைக்காகக் கூறுகின்றார். இது தவிரத் திருக்குறளின் அறத்துப் பால் மற்றும் காமத்துப் பாலின் தோற்றுவாய் உரைகளிலும் 359, 361 ,467, 501, 961 ஆகிய குறட்பா உரைகளிலும் இவரது வடமொழி அறிவை நன்கு வெளிப்படுகின்றது.

## சமய அறிவு

பரிமேலழகர் அனைத்துச் சமயங்களையும் நன்கு அறிந்தவர். மேலும் அவர் பரந்துபட்ட சமய அறிவுடையோராய்த் திகழ்ந்தார். இவரது பல் சமய நூலறிவை 27, 286, 358, 359, 361 ஆகிய குறட்பா உரைகளிலும் 34 ஆம் அதிகாரத்தின் தோற்றுவாயிலும் 355 ஆம் குறட்பாவின் குறிப்பு விளக்க உரையாலும் அறியலாம். அருகர் தரும் தியானம், சுக்கிலத் தியானம், உவர்ப்பு, தத்துவங்களின் தொகுதி போன்ற புறச்சமயக் கருத்துகளை நன்கு விளக்குகின்றார். சான்றாக 361 ஆம் குறட்பா விளக்க உரையில்

"இஃது எல்லாச் சமயங்கட்கும் ஒத்தலான் என்ப என்றும் கூறினார்"

என்று உரைப்பதால் இவரது பல்சமய அறிவை நன்கறியலாம்.

## வரலாற்று செய்திகள்

பரிமேலழகர் தம் காலத்திலும் தமக்கு முன்னும் இருந்த வரலாற்று செய்திகளை நன்கறிந்திருந்தார். இவற்றைக் கற்போர் மனதில் நன்கு பதியுமாறு கூறிச்சென்றுள்ளார். இவர் கூறும் பல்வேறு வரலாற்று செய்திகள் புறநானூறு, சீவக சிந்தாமணி, இராமாயணம், பரதம் போன்ற நூற்களில் உள்ளன. சான்றாக ஔவையுண்ட நெல்லிக்கனி (குறள்:100), இந்திரன் செய்த பழிச்செயல் (குறள்:144), கட்டியங்காரன் (குறள்:514), தன்கை குறைத்தான் (குறள்:547), பதுமுகன் (குறள்:771), கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் (குறள்:785), நகுஷன் வரலாறு (குறள்:899), திரிபுரம் எரித்தல் (குறள்:900), பாண்டவர் வனவாசம் (குறள்:935) போன்ற வரலாற்று செய்திகளைத் தம் உரையின் இடையிடையே அளித்துச் செல்கின்றார். இவை யாவும் அவரது வலராற்றுப் புலமையை நன்கு உணர்த்தும்.

## உரை மறுக்கும் முறை

இவர் தம் உரையில் பிற உரையாசிரியர்களை,

"எல்லாரும் உரைத்தார்" (குறள்:643)

"பிறரெல்லாம் உரைத்தார்" (குறள்:817,1069,1262)

என்று சுட்டுகின்றார். தம் உரையில் பிற உரையாசிரியர்களின் கருத்துகளை மறுத்துள்ளார் என்றாலும் அதை நயமுடனே மறுத்துள்ளார். தம் கருத்தே சிறப்பு என்று எவ்விடத்தும் இவர் வலிந்து கூறினாரில்லை. இது தவிர பிற உரையாசிரியர்களின் பாட பேதங்களையும் பாட வேறுபாடுகளையும் தம் உரையில் தவறாமல் கூறித்துச் சென்றுள்ளார்கள். பிறர் உரையை மறுக்கும் இடத்திலும் நயமான அணுகுமுறையைப் பின்பற்றுகின்றார் (Parimelalhagar, 2000).

## மாறுபாடு விலக்கல்

இவர் திருவள்ளுவரை மிகவும் உயர்வாக மதித்துப் போற்றியவர் என்பது அறியலாகின்றது,

"எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லோர்க்கும் பொதுப்பட

கூடுதல் இவருக்கு இயல்பு" (குறள்:322)

என்று திருவள்ளுவரை உயர்வாகப் பாராட்டுகின்றார். இவர் திருக்குறளில் உள்ள வெவ்வேறு இடங்களில் காணப்படும் மாறுபாடான சொற்களுக்கு உரிய விளக்கங்களைக் கூறித் தெளிவுபடுத்தித் திருக்குறளுக்குப் பெருமை சேர்க்கின்றார். வெவ்வேறு இடங்களில் உள்ள வார்த்தைகளின் மாறுபடும் பொருளையும் உரிய விளக்கங்கள் கூறித் தெளிவுபடுத்துகின்றார். சான்றாக,

"துங்காமை கல்வி துணிவுடமை இம்மூன்றும்

நீங்கா நிலன் ஆள் பவர்க்கு" (குறள்:383)

என்பதும்,

"தூங்குக தூங்கிச் செயற்பால" (குறள்:672)

என்பதும் வேறுபடுவதால் "மேல் தூங்காமை என்றார், ஈண்டு அதனைப் பகுத்துக்கூறினார்" என்று கூறி இருபாகுபாடுகளையும் விளக்குகின்றார்.

"மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு" (குறள்:396)

என்பதும்,

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும் தன்

உண்மை அறிவே மிகும்" (குறள்:373)

என்பது வேறுபடுவதால் "இது ஊழ் மாறுகொள்ளா வழியாகலின் மேல் உண்மை அறிவே மிகும், என்றதனோடு மலையாமை அறிக" என்று விளக்குகின்றார் (Parimelalhagar, 2000).

## உலகியல் அறிவு

பரிமேலழகர் மானிடற்கே சிறப்பாக உள்ள பொது அறிவு உடையவராகத் திகழ்ந்தார். மேலும் அவர் உலகியல் அறிவு நிரம்பியவராகவும் திகழ்ந்தார். சான்றாக வறியவரைச் சுற்றத்தார் நீங்கிவிடுவர் என்பதற்கு

"கொள்வது இன்று ஆதலேயன்றிக் கொடுப்பது உண்டாதலும்

உடைமையின் அது நோக்கிச் சுற்றத்தார் யாவரும் துறப்பர்" (குறள்:1047)

என்று விளக்குகின்றார். தும்மும் போது மூச்சுடன் உயிர் போய் விடுமோ என்றஞ்சி "நூறு ஆயுள்" என்று மகளிர் வாழ்த்துதலையும் (குறள்:1312) அன்புடையார் நினைத்த வழி அந்நினைக்கப் பட்டவருக்குத் தும்பல் தோன்றுதல் இயல்பு (குறள்:1317) போன்ற உலக வழக்குகளையும் வழக்காறுகளையும் தம் உரையில் எடுத்தாளுகின்றார். இது தவிர அக்காலப் பேச்சு வழக்குகளான,

"நெருப்பை நெருப்பாகவே கருது" (குறள்:602)

"ஒருவர் கூறை எழுவர் உடுத்து" (குறள்:1269)

போன்றவற்றையும் எடுத்தாள்கின்றார்.

## பல் திறமை

இவர் பல்வகைத் திறமை உடையவராகக் காணப்பட்டார். இவர் சிறந்த இசைத் திறமை உடையவர். இசை நுணுக்கங்கள் யாவும் நன்கு அறிந்தவர் என்பது இவருரையால் அறியலாம். சான்றாகப் பண் என்பதற்கு (குறள்:573)

"பண்களாவன, பாலையாழ் முதலிய நூற்று மூன்று, பாடல் தொகுதிகளாவன: யாழின் கண் வளர்த்தல் முதலிய எட்டும், பண்ணல் முதலிய எட்டும், மிடற்றின்கண் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம் என்னும் ஐந்தும், பெருவண்மை, இடைவண்ணம், வனப்பு, வண்ணம் முதலிய வண்ணங்கள் எழுபத்தாறுமாகும்"

என்று பண்ணுக்கு இலக்கணம் கூறி அமைகின்றார். மேலும் இவர் மருத்துவ இயலையும் நன்கறிந்தவராகத் திகழ்ந்தார். மருத்துவ நூல்களிலும் நன்கு பயிற்சியுடைவர் என்றும் தெரிகின்றது. சான்றாக அற்றது அறிந்து (குறள்:944) என்ற குறளின் உரைக்கு,

"தேனும் நெய்யும் தம்முள் அளவொத்து நஞ்சாதல் போல்வன"

என்று கூறித் தன் மருத்துவ அறிவை வெளிப்படுத்துகின்றார். இது தவிரப் பரிமேலழகர் மிகுந்த அரசியல் ஞானம் உடையவராகவும் திகழ்ந்தார். திருக்குறளில் வரும் அரசியல் தொடர்பான குறட்பாக்களுக்கு மிகவும் நுட்பமுடன் விளக்கமளிக்கின்றார். சான்றாக "உறு பொருளும்" (குறள்:756) என்ற குறட்பாவிற்கு விளக்கமளிக்கையில்

"உறு பொருள் வைத்தார் இறந்து போக நெடுங்காலம் நிலத்தின்

கண்ணே கிடந்து பின் கண்டெடுத்ததூஉம், தாயத்தார்

பெறாததூஉம் ஆம்"

என்று விளக்குகின்றார். இவ்வாறு அவருரை அவர்தம் பல்வகைத் திறன்களை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

## முடிவுரை

தமிழ் இலக்கிய உலகில் உரையாசிரியர்களின் பங்கு இன்றியமையாததாகும். இளம்பூரணர் தொடங்கி நச்சினார்க்கினியர் போன்றோர் தம் அரிய பங்களிப்பை அதற்கு நல்கியுள்ளனர். ஆனால் அவர்களினின்று பரிமேலழகர் மாறுபட்டுத் திகழ்கின்றார். அவரது உரை ஈடு இணையற்றதாக இன்று வரை திகழ்ந்து வருகின்றது. அக்காலத்தில் அவர் வட மற்றும் தென் மொழிக் கடலாகத் திகழ்ந்தார் என்பது அவர்தம் உரையின் மூலம் புலனாகின்றது. மேலும் அவர் சமயப் பொறை கொண்டவராகவும் திகழ்ந்தார். திருக்குறள் படிப்போர் அவற்றை முழுமையாக அறிந்து உணரவேண்டும் என்பதே அவரின் நோக்கமாக இருந்தது. இதுதவிர அவரது உரை பல்வகையான சிறப்புகளைக் கொண்டு திகழ்ந்து வருகின்றது. திருக்குறள் இத்தனை புகழ் பெறுவதற்குப் பரிமேலழகர் உரையும் ஒரு காரணமாகும். திருக்குறள் இவ்வுலகில் உள்ள வரை பரிமேலழகர் உரையும் நிலைத்து வாழும் என்பதில் ஐயமில்லை.

## References

Padikkasu Pulaver, (1887). Thondaimandala Chathakkam, Victoria Press, Chennai, India.

Parimanam, A.M., & Balasubramaniyam, K.V., (2007), Paripadal, New Century Book House Pvt

ltd, Chennai

Parimelalhagar, (2000) Thirukkural Parimelazhagar Commentory, Saratha Publications, Chennai, India.

Raghava Iyengar, Mu., (1935) Peruntokai, Chenthamil Publications, Madurai, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License